# <u>தேசிய நீர் வளங்கள் கொள்கை சம்பந்தமாக பொது மக்களினது கருத்துக்களை கோருதல்</u>



**<u>தேசிய நீர் வளங்கள் கொள்கை சம்பந்தமாக பொது மக்களினது கருத்துக்களை கோருதல்</u>**

2025 ஜூலை மாதம் 02 ஆந் திகதிய, இலக்கம் අමප/25/1065/802/017 ஐ உடைய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், இன்றளவிலும் அதிகாரம் பெற்றுள்ள தேசிய நீர் வளங்கள் கொள்கையை ஆராய்ந்து தேவையான திருத்தங்களை அறிமுகப்படுத்திய வண்ணம் புதிய தேசிய நீர் வளங்கள் கொள்கையை வடிவமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதுடன், இவ் விடயம் தொடர்பாக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழு, அமைச்சுக்களின் செயலாளர்களின் குழு மற்றும் தொழில்நுட்பக் குழு ஆகியன கூட்டாக இரண்டு ஆலோசகர்களினது உதவியுடன் கூடியதாகத் தயாரிக்கப்பட்ட தேசிய நீர் வளங்கள் கொள்கையின் வரைவு, பொது மக்களினது கருத்துக்களை கோரும் முகமாக கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சினால், தற்சமயம் அமைச்சின் நீர்ப்பாசனப் பிரிவிற்கு உரித்தான இணைய தளத்தில் (www.irrigationmin.gov.lk) மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சினால், இவ் விடயம் சம்பந்தமாக ஆர்வம் காட்டுகின்ற தரப்பினரிடமிருந்து கருத்துக்களையும், முன் மொழிவுகளையும் எழுத்து மூலமாக பெற்றுக் கொள்வதற்கு எதிர்ப்பார்க்கப்படுவதுடன், அவற்றை வரைவிலுள்ள தொடர்புடைய பிரிவுகளின் பிரகாரம் முன் வைத்தல் வேண்டும்.

இவ் விடயம் தொடர்பான அனைத்து விதமான கருத்துக்களையும், முன் மொழிவுகளையும் 2026.04.10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படையில் அமைச்சுக்கு முன் வைத்தல் வேண்டும்.

கருத்துக்களை முன் வைக்கக் கூடிய வழி முறைகள் :

1. மின்னஞ்சல் : waterpolicy.public@gmail.com
2. கடிதத்தின் வாயிலாக : செயலாளர், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு, இலக்கம் 500, ரீ. பீ. ஜயா மாவத்தை, கொழும்பு 10
3. தொலை நகல் வாயிலாக : 0112684053

**Click here to download the policy: English**

**Click here to download the policy: Tamil**

**Click here to download the policy: Sinhala**

**செயலாளர்**
**கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**